## ஜனவரி – 03 – வியாழன்

### இயேசுவின் திருப்பெயர்

### “ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் ”திபா 98:1

**முதல் வாசகம் : 1 யோவான் 2 : 29 --- 3 : 1 - 6**

அன்பிற்குரியவர்களே! இறைவன் நேர்மையாளரென நீங்கள் அறிந்துகொண்டால், நேர்மையாகச் செயல்படுவோர் அனைவரும் அவரிடமிருந்து பிறந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள். நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை. என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப் போல் இருப்போம் ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம். அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும். பாவம் செய்யும் அனைவரும் சட்டத்தை மீறுகின்றனர். சட்டத்தை மீறுவதே பாவம். பாவங்களை நீக்கவே அவர் தோன்றினார் என்பது உங்களுக்குத் தெரியும். அவரிடம் பாவம் இல்லை. அவரோடு இணைந்திருக்கும் எவரும் பாவம் செய்வதில்லை. பாவம் செய்பவர் எவரும் அவரைக் கண்டது மில்லை, அறிந்ததுமில்லை.

**பதில்பாடல் :** மாந்தர் அனைவரும் நம் கடவுள் அருளிய
விடுதலையைக் கண்டனர்.

**நற்செய்தி : யோவான் 1 : 29 - 34**

இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான், ”இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர் ஏனெனில் எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப்பற்றியே சொன்னேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும் வருகிறேன்” என்றார். தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது : ”தூய ஆவி புறாவைப்போல வானிலிருந்து இறங்கி இவர் மீது இருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர் ”தூய ஆவி இறங்கி யார்மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர்” என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன் இவரே இறைமகன் எனச்சான்றும் கூறிவருகிறேன்.”

**தியானம்:** இறைமகன் கிறிஸ்து இயேசுவை இறை ஞானத்தினால் தெரிந்துணர்ந்த திருமுழுக்கு யோவான் “இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி” என ஆரவாரத்துடன் முன்னறிவிப்பதனை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது. கிறிஸ்து இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட ஞானத்தினை ஆண்டவராம் கடவுள் வழங்கி, அவரது ஞானத்தின் ஒளியில் ஒவ்வொருவரும் வழிநடக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார். அதுமட்டுமல்லாது, அன்றாட நாளாந்த வாழ்க்கைச் சுமைகளுக்கு மத்தியிலும் இறைவனது ஞானத்தின் வல்லமை எங்களிலும் செயல்பட முடியும் என்பதனை கண்டுணர்ந்து வாழவேண்டு மெனவும் எதிர்பார்க்கின்றார். திருமுழுக்கு யோவான் தூய ஆவியின் தூண்டுதலால் இறைவனாம் ஆண்டவருடன் நெருக்கமான உறவினை வைத்திருந்தார். எனவே, அவரை இறைவன் வல்ல பெரிய செயல்களைச் செய்வதற்காகப் பயன்படுத்தினார். எனினும், வெறும் களிமண்ணால் இறை சாயலாக வடிவமைக்கப்பட்ட அற்ப பதரான எங்களையும், தம்முடன் நெருக்கமான உறவு வைத்திருந்து வல்ல செயல்களைச் செய்விக்க இறைவனாம் ஆண்டவர் எதிர்பார்க்கின்றார். எம்மால் நன்மை, தீமை எவையெனவும் பாவ, புண்ணியம் என்றால் என்ன எனவும் பகுத்துணர முடியும். இப் பகுத்துணர்வை நாம் ஜெபத்தோடு கூடிய விண்ணப்பங்களாக இறைபாதம் சமர்ப்பிக்க வேண்டும். அப்போது இறைவனாம் ஆண்டவர் தமது மேலான காரியங்களுக்காக எம்மை எவ்வாறு தமது கருவியாகப் பயன்படுத்த முடியும் என்ற ஞானத்தினை வழங்குவார். இப்புதிய 2019ம் வருடத்தில் நாம் எடுக்கும் வாக்குறுதிகளில் ஒன்றாக அனுதினமும் செபத்தோடு கூடிய விண்ணப்பங்களையும் மன்றாட்டுக்களையும் இறைபாதம் சமர்ப்பிப்போம். செபங்களினூடாக நாம் எவ்வளவு தூரம் இறைவனை நெருங்கிச் செல்கின்றோமோ அதேபோன்று பன்மடங்கு தமது வரங்களாலும், ஆசீர்வாதங்களாலும் எம்மை நிரப்பி, வல்லவராம் கடவுள் நல்லவைகள் செய்வார் என்ற நம்பிக்கையோடு அவரது ஞானத்தைக்கேட்டு அனுதினமும் செபத்திட இப்புது வருடத்தில் முடிவெடுப்போம். ஆண்டவரே! என்னால் மாற்ற முடியாத காரியங்களை தெளிந்த மனதோடு நான் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தையும்……என்னால் மாற்றியமைக்கக் கூடிய காரியங்களை நான் மாற்றியமைக்கும் துணிவையும்…… இவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை புரிந்துகொள்ளும் ஞானத்தையும் எனக்கருளும் - ஆமென்